கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு

(2012/2013)

# EDS 4243 கல்வியில் தற்கால எழுவினாக்களும் கொள்கைகளும் (Contemporary issues and policies in Education)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஏவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. "தனியாள், சமூகம், நாடு என்பன தொடர்பில் விரும்பத்தக்க வளர்ச்சியே அபிவிருத்தி ஆகும்"

(அ) மனித வாழ்க்கையின் பண்புத் தரத்தினை முன்னேற்றுவதில் கல்வி பெறும் முக்கியத்துவத்தினை கல்வி அபிவிருத்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) கல்வியானது நுகர்வில் இருந்து முதலீடாக மாற்றமடையும் செயன்முறையினை ரிச்மர் முன்வைத்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(15 புள்ளிகள்)

2. (அ) நவீன பொருளாதார முறை வழங்குகின்ற வேலைவாய்ப்புக்கள் உயர்தரமான எழுத்தறிவையும் எண்ணறிவையும் வேண்டி நிற்கின்றன என்ற சிந்தனையின் அடிப்படையில் இன்றைய பாடசாலைக் கலைத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களை நடைமுறை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக. (12 புள்ளிகள்)

(ஆ) கல்வியை சர்வதேச மயமாக்குவதில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால போக்குகளை சில நாடுகளின் படிப்பினைகளை விமர்சன ரீதியாக ஆராய்க. (13 புள்ளிகள்)

3. (அ) கல்விக்கொள்கை உருவாக்கத்தின் போது கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பிரச்சினைகள் என Weiler கூறும் 3 பிரச்சினைகளைக் குறிப்பிடுவதுடன் அப்பிரச்சினைகளை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு நீர் கூறும் ஆலோசனைகளையும் முன்வைக்குக. (15 புள்ளிகள்)

(ஆ) கல்வியின் மூலம் பொருளாதார அபிவிருத்தி இடம்பெறுவதை வெளிப்படுத்தும் 4 காரணிகளையும் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

4. (அ) இனம், மதம், மொழி ரீதியாகத் தோன்றும் பிரச்சினைகள் கல்வியில் சம வாய்ப்பினை ஏற்படுத்துவதில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை சில நாடுகளின் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் கல்விச் செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்கு பிரச்சினைகளை இலங்கையை மையமாகக் கொண்டு பட்டியற்படுத்துக.

I. வளர்ந்தோர் கல்வி

II. பெண்கல்வி

III. தொழிற்கல்வி (3 X 5 = 15 புள்ளிகள்)

5. (அ) "ஒரு நாட்டின் கல்விக் கொள்கையை உருவாக்குவதில் அந்நாட்டி காலத்திற்குக் காலம் ஏற்படும் ஆட்சி மாற்றங்கள் பாரிய செல்வாக்கு செலுத்துகின்றன" இக்கருத்தினை இலங்கையில் சுதந்திரத்தின் முன்னரும் பின்னரு ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (15 புள்ளிகள்

(ஆ) "அனைவருக்கும் கல்வி" என்ற தேசிய இலக்கினை அடைவதற்காக C.W.W கன்னங்கரா அவர்களினால் முன்வைக்கப்பட்ட கல்விச் சிபார்சுகளை குறிப்பிடுவதுடன் அவை இன்று எவ்வாறு நடைமுறையில் உள்ளதென்பதை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்

6. (அ) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் கல்விப் பிரச்சினைகளை பட்டியற்படுத்துவதுடன் எதிர்காலத்தில் அவற்றைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளக்கூடி கல்வித் திட்டமிடல்கள் என நீர் கருதுபவற்றை விளக்குக. (13 புள்ளிகள்

(ஆ) இலங்கையின் தேசிய கல்விக் கொள்கையை அடைந்து கொள்வதில் இன் நடைமுறையிலுள்ள மாணவர் மையக் கலைத்திட்டம் பெறும் முக்கியத்துவத்தினை பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து விளக்குக. (12 புள்ளிகள்